**O.S.No. : 82/2015**

Dated: 07.03.2026

**வா.சா.1: தேகுரம்மா ; க/பெ. ராமன்**

**<u>7 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. K.P. ராஜு என்பவர் கட்டிட வரைபட அனுமதி கேட்டு விண்ணப்பம் செய்யும்போது அதற்கான வரைபடத்தினை எனது கணவர்தான் தயார் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல, அந்த வரைபடத்தினை நகராட்சி அலுவகத்திலிருந்த பொறியாளர்தான் தயார் செய்தார். கோடப்பமந்து சாலையிலிருந்து எனது வீட்டிற்கு செல்லும் சாலை நகராட்சிக்கு சொந்தமானதா அல்லது 7 ஆம் பிரதிவாதிக்கு சொந்தமானதா என்றால் அந்த சாலை நகராட்சிக்கு சொந்தமான சாலையாகும். எனது கணவர் நில அளவையர் என்பதால் இல்லாத ஒரு சாலையை இருப்பதாக வரைபடம் தயாரித்து அனுமதி பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, K.P. ராஜு என்பவர்தான் அந்த சாலையை எங்களுக்கு எழுதிக்கொடுத்தார்.

2. K.P. ராஜுவிற்கு அந்த நிலத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றும், எனது கணவர் சந்திரனுக்கு சொந்தமான பூமியை சாலை என்று அவரது அனுமதியில்லாமல் வரைபடம் தயாரித்து கட்டிட அனுமதி பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, சந்திரன் என்பவருக்கு அந்த இடத்தில் பூமி இல்லை, வழக்கறிஞர் ரங்கசாமி என்பவர்தான் அதிகார முகவராக இருந்து அந்த இடத்தில் K.P. ராஜு உள்ளிட்ட நபர்களுக்கு பூமியை விற்பனை செய்துள்ளார். நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

**(மேற்படி குறுக்கு விசாரணையானது 3 முதல் 6, 8 மற்றும் 9 பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது).**

Loganathan Prakash

Digitally signed by Loganathan Prakash
Date: 2026.03.07 12:59:52 +0530